# கொங்கு வேளாளர் திருமணங்களில் புழங்கு பொருட்கள்

**த.ஜோதிமணி**
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம்

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** II

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

## முன்னுரை

மனிதன் நாடோடியாகச் சுற்றித்திரிந்த காலத்திலிருந்தே தனது அடிப்படைத் தேவைகளுக்காக பல்வேறு வகையான கற்கருவிகளை உருவாக்கி வேட்டையாடுதல், கிழங்கு தோண்டுதல் போன்றவற்றிற்காகப் பயன்படுத்தினான். பின்னர் நாகரிக வளர்ச்சியின் காரணமாக தேவைக்கேற்றவாறு செம்பு, இரும்பு, பித்தளை, அலுமினியம் போன்ற பல்வேறு உலோகங்களாலான பொருட்களை உருவாக்கினான். இவ்வாறு மனிதனின் பயன்பாட்டிற்காக மனிதனால் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்படும் பொருட்கள் 'புழங்கு பொருட்கள்' எனப்படும்.

"இயற்கை வளங்களைப் பண்பாட்டுப் படைப்புகளாகவும் கலைப்படைப்புகளாகவும் மாற்றிக்கொள்வதையே புழங்கு பொருள்சார் பண்பாடு என்கிறோம்."[1]

புழங்குதல் என்பதற்கு உபயோகத்தில் இருத்தல், பயன்கருதி கையாளப்படுதல் என்று நர்மதாவின் தமிழகராதியும் கையாளுதல், வழங்குதல் என்று கழகத் தமிழ் அகராதியும் விளக்கமளிக்கின்றன. குறிப்பிட்ட இனத்தினரால் பயன்படுத்தப்படும் 'புழங்கு பொருட்கள்' அவர்களின் பண்பாட்டை முழுவதும் வெளிப்படுத்துவதாக அமையும். இதனை மக்களின் வாழ்விலிருந்தும் பண்பாட்டிலிருந்தும் பிரிக்க இயலாது. இப்புழங்கு பொருள்கள் மனிதர்களின் வாழ்வில், தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றப்பட்டு வரும் சடங்குகளிலும் முக்கியப்பங்கு வகிக்கின்றன. சடங்குகள் இனத்திற்கு இனம் வேறுபட்டுத் தனித்தன்மையுடன் இருப்பதுபோல் அதில் இடம்பெறும் சில புழங்குபொருட்களும் வேறுபடுகின்றன. எனவே கொங்கு வேளாளர்களின் திருமணச் சடங்குகளில் இடம்பெறும் முக்கியப் புழங்குபொருள்களையும் இன்றைய நிலையில் அவைகள் பெற்றுள்ள மாற்றங்களையும் களஆய்வில் பெறப்பட்ட தகவல்களின் வழி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## புழங்கு பொருள் பண்பாடு

"ஒரு பண்பாட்டைச் சேர்ந்த பொருட்கள் அதற்கென்ற பொருளையும் (Meaning) பயன்பாட்டையும் நிலையாகக் கொண்டு அப்பண்பாட்டில் நிலை பெற்றிருக்கும். மக்களின் தேவைகளுக்காகப் பொருட்கள் ஏற்படுத்தப்பட்டதால் அத்தேவைகள் பண்பாட்டில் நிலைபெற்றுள்ளவரை அப்பொருள்களும் அப்பண்பாட்டில் இருக்கும். பண்பாடு மாற்றம் ஏற்பட்டுச் சில குறிப்பிட்ட தேவைகள் அற்றுப் போனால் அவற்றிற்குரிய பொருள்களும் மறைந்துபோகும். ஆகவே ஒரு பண்பாட்டைச் சேர்ந்த அனைத்துப் பொருட்களையும் கொண்டு அம்மக்களின் பண்பாட்டை பெருமளவு அறிய முடியும்."[2]

புழங்கு பொருட்கள் ஒரு பண்பாட்டில் நிலைபெற வேண்டுமெனில் அதன் தேவை இருந்துகொண்டே இருக்கவேண்டும். இல்லாவிட்டால் அப்பொருள் இல்லாமல் போய்விடும். எனவேதான் இன்றைய காலத்தில் பல நவீனப் பொருட்களின் தாக்கத்தால் பழமையான புழங்கு பொருட்களின் தேவை குறைந்துகொண்டே வருகின்றது.

### கொங்கு வேளாளர் திருமணம்

கொங்கு நாட்டின் பூர்வீகக் குடிகளாகிய கொங்கு வேளாளர்களின் திருமணச் சீர்கள் மிகவும் தொன்மை வாய்ந்தது. அதில் பயன்படுத்தப்படும் பொருள்களும் தொன்மை வாய்ந்ததாகவே உள்ளன. மண் கலன்கள், குந்தாணி, சருவச்சட்டி(கலம்), பேழைக்கூடை, அம்மி, குழவி, மண் விளக்கு போன்ற பல்வேறு பழம் பொருட்கள் கொங்கு வேளாளர்களின் சடங்குகளில் இன்றுவரை புழக்கத்தில் உள்ளன.

புழங்கு பொருட்களை இயற்கைப் புழங்கு பொருட்கள் மற்றும் செயற்கைப் புழங்கு பொருட்கள் என இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

### இயற்கைப் புழங்கு பொருட்கள்

மனிதர்கள் தங்களின் வாழ்வியல் தேவைகளுக்காக பல்வேறு இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்துகின்றனர். அவை ‘இயற்கைப் புழங்கு பொருட்கள்’ எனப்படும். கொங்கு வேளாளர்கள் தங்களின் திருமணச் சடங்குகளில் மரங்கள், இலைகள், காய்கள், கனிகள், தானியங்கள் எனப்பல்வேறு இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்துகின்றனர்.

### வெப்பாலை மரம்

திருமணத்திற்கு முந்தைய நாள் ‘முகூர்த்தக்கால் நடுதல்’ என்னும் நிகழ்வு நடக்கிறது. அப்போது பாலை மரத்திற்குப் பூசை செய்து மூன்று கிளையுள்ள பகுதியை கொண்டுவந்து மணப்பந்தலில் ஈசானிய (வட கிழக்கு) மூலையிலுள்ள பந்தற்காலில் கட்டப்படுகிறது. பண்டைய காலத்தில் அரசு, பாலை, பாச்சான் போன்ற மரங்களில் ஏதேனும் ஒன்றை நடுவது வழக்கமாக இருந்தது. ஆனால் தற்போது பாலை மரம் மட்டுமே நடப்படுகிறது. பாலை மரங்கள் அனைத்து இடங்களிலும் எளிதில் கிடைக்கக்கூடியது என்பதால் காலப்போக்கில் இதனை மட்டுமே பயன்படுத்தும் வழக்கம் தோன்றியிருக்கலாம். இதுபோன்ற பால் உள்ள மரங்கள் எளிதில் வாடாது என்பதாலும் பால் வளமையின் அடையாளம் என்பதாலும் இதனைப் பயன்படுத்துகின்றனர்.

### வாழை மரம்

அனைத்துத் தமிழர்களின் திருமணங்களிலும் தவறாமல் இடம் பெறுவது வாழைமரம் ஆகும். வாழையடி வாழையாக வம்சம் தழைக்க வேண்டும் என்பதற்காக முக்கிய சுபநிகழ்வுகளில் இது பயன்படுத்தப்படுகிறது.

### புளி ஆக்கை

புளி ஆக்கை என்பது புளியமரத்திலிருந்து மூன்று இளம் கிளைகளை (விளார்) வெட்டி அதனை இரண்டாகப் பிளந்து நீள் வட்டமாகச் செய்வர். மணமகனுக்குப் புனித நீராட்டும்போது இதனை தலையைச் சுற்றியும் தலையிலிருந்து கால் வரை இறக்கித் தாண்டவும் செய்வர். இவர்கள் இதனை ‘ஆக்கை சுத்தி தண்ணி ஊற்றுதல்’ என்று குறிப்பிடுகின்றனர். புளியமரம் போல் வாழ்வில் உறுதியுடன் இருக்க வேண்டும் எனவும் தீய சக்திகளை விலக்கவும் இது பயன்படுத்தப்படுகிறது.

### பேய்க்கரும்பு, அரசு இலை, நவதானியங்கள்

பேய்க்கரும்பு என்பது இனிப்புச் சுவையற்ற கரும்பாகும். இதனைக் கடித்தால் உதடுகளில் வீக்கம் ஏற்படும் என்பர். காமனின் அடையாளமாகக் கருதப்படும் இக்கரும்பு கொங்கு வேளாளர்களின் திருமணங்களில் இடம்பெறக்கூடிய மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். இது முந்தைய காலத்தில் எளிதில் கிடைக்கக் கூடியதாக இருந்தது. ஆனால் தற்காலத்தில் மிகவும் அரிதான ஒன்றாக இருப்பதால் இதனை, நாவிதர்கள் தங்களின் வீடுகளில் வைத்து வளர்க்கின்றனர்.

இணைச்சீர் மேடையிலும், திருமண மேடையிலும் அமைக்கப்படும் அரசாணியில் பேய்க்கரும்புடன் அரசு இலையும் நவதானிய முடிப்பும் வைத்துக் கட்டப்பட்டிருக்கும். நவதானியங்கள் நவகிரகங்களைக் குறிக்கும். ஆகையால் நவகிரகங்களும் திருமணத்திற்குச் சாட்சியாக அமைந்து குடும்பத்தைக் காக்கும் என நம்பப்படுகிறது.

### பிற மங்கலப் பொருட்கள்

வாழைப்பழம், எலுமிச்சம்பழம், மஞ்சள், தேங்காய், பூ, வெற்றிலை பாக்கு, அருகம் புல், நெல், அரிசி, பால், நெய், தண்ணீர் போன்ற இயற்கைப் பொருட்கள் தொடக்கம் முதல் இறுதிவரை திருமணத்தின் அனைத்துச் சடங்குகளிலும் பயன்படுத்தப்படுகிறது. வேப்பிலை, மாவிலை போன்றவை பந்தல் அலங்காரத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றன..

### மண் கலன்கள்

பண்டைய காலத் தமிழர்களின் புழங்கு பொருட்களுள் மண் கலன்கள் பெரும்பங்கு வகித்தன. வீட்டு உபயோகப் பொருட்கள் அனைத்தும் மண்ணால் செய்யப்பட்டிருந்தன. அவற்றை கொங்கு வேளாளர்கள் தங்களின் சடங்குகளில் பயன்படுத்தியதால் இன்று வரை அவ்வழக்கம் தொடர்கிறது.

“திருமணத்திற்குத் தேவையான மண்பாண்டங்களைச் செய்வதற்காக குயவர்களிடம் வெற்றிலை பாக்கு கொடுத்து உறுதி செய்யப்படும். அதனை வாங்கிக் கொண்டு ஐந்து கரகப்பானைகள், இரண்டு தண்ணீர்ப் பானைகள், இரண்டு தடச்சட்டிகள், இரண்டு தண்ணீர்க் கலயம், ஒரு நெய்க்கலயம் போன்றவற்றைச் செய்து தருவர்”[3] மண் கலன்கள் அனைத்தையும் மணமகன் வீட்டிலிருந்து திருமணம் நடைபெறும் பெண் வீட்டிற்கு கொண்டு வருவது மரபு.

பழங்காலத்தில் திருமணச் சீருக்காக குயவர்களால் செய்து தரப்பட்ட பொருட்கள் இன்னின்ன என்பதைப் பின்வருமாறு மதுக்கரைப்பட்டயம் பட்டியலிடுவதாக புலவர் செ.இராசு குறிப்பிடுகிறார். அவையே, மிடா 4, தண்ணீர்ச்சால் 1, பெரிய சால் 2, தண்ணீர்க்குடம் 4, தாளி 4, கரிச்சட்டி 4, உரிச்சட்டி 4, நெய்க்கலயம் 2, பெரிய தடச்சட்டி 1, தண்ணீர்க் கலயம் 4 ஆகும்.

புழங்கு பொருட்களின் பயன்பாடு காலத்திற்கேற்ப மாறுபடக் கூடியது. பண்டைய காலத்தில் மண் பாண்டங்களே அதிகமாகப் புழக்கத்தில் இருந்ததால் அப்போது திருமணத்திற்காகக் குலாலர்களிடமிருந்து பெறப்பட்ட மண்பாண்டங்களுக்கும் உலோகப்பொருட்களின் பயன்பாடு மிகுதியாக உள்ள இன்றைய காலத்தில் பெறப்படும் மண்பாண்டங்களுக்கும் சிறு வேறுபாடு இருப்பதைக் காணமுடிகிறது.

### ஆயிரம் பெருந்திரி விளக்கு

மண்ணாலான சிறிய தட்டு போன்ற அமைப்புடைய தடச்சட்டியில் எண்ணெய் ஊற்றி இதில் பெரியதாகத் திரிக்கப்பட்ட திரியைப் போடுவர். அதன் முனைப்பகுதியில் சோற்று உருண்டையை வைத்து அழுத்தி விடுவர். இதனை ‘ஆயிரம் பெருந்திரி விளக்கு’ என்பர். திருமணத்திற்கு முதல் நாள் அரசாணிப் பூசையின் போது வைக்கப்படும் இவ்விளக்கு திருமணம் முடியும் வரை அணையாமல் எரிய வேண்டும் என்பர். விளக்கு அணைந்துவிட்டால் குடும்பத்திற்குத் துன்பம் நேரும் என்பது நம்பிக்கை.

### கரகப்பானை

திருமணத்தின்போது பயன்படுத்தப்படும் சிறிய அளவிலான பானையைக் கொங்கு வேளாளர்கள் கரகப்பானை என்கின்றனர்.

“கரகப்பானைகள் மொத்தம் ஐந்து இருக்கும். இரண்டு பானைகளை முழுவதும் நெல்லால் நிரப்பி அதன் மேல் வெற்றிலை பாக்கு வைத்து அதனைத் துணியால் கட்டுகின்றனர். இரண்டு பானையில் தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, கொம்பு மஞ்சள் போன்றவற்றை வைத்துக் கட்டுகின்றனர். மீதமுள்ள ஒருபானையில் ‘கழி நூல்’ என்னும் நூல் வைக்கப்பட்டிருக்கும்”[4]

### தண்ணீர்க் கலயம், நெய் கலயம்

கலயம் என்பது சொப்பு போன்ற அமைப்பில் சிறியதாகவும் வாய்ப்பகுதி குறுகலாகவும் இருக்கும். வாய்ப்பகுதியில் தண்ணீர் சொட்டுச் சொட்டாக இறங்கும் வகையில் ஒரு துளை போடப்பட்டிருக்கும்.

இதில் நீரை நிரப்பி வைப்பர். சடங்குகள் முடிந்தவுடன் இக்கலயத்தில் உள்ள நீரைத் தீர்த்தம் போல் துளை வழியாக ஒழுகுமாறு எடுத்துக் கொண்டு மணவறையைச் சுற்றிச் வந்து பின்னர் வீட்டுக் கூரையின் மீது ஊற்றுகின்றனர். நிறைந்த நீர் நிறைவான வாழ்வைத் தரும் என்பதால் நீர் நிறைந்த கலயங்கள் வைக்கப்படுகிறது. நெய்க் கலயத்தில் நெய் வைக்கப்பட்டிருக்கும். இதனை திருமணம் முடிந்த பின்னர் மணமகனும் மைத்துனனும் மோதிரம் பிடுங்கும் நிகழ்வின் போது பயன்படுத்துகின்றனர்.

**தண்ணீர்ப் பானை**

தண்ணீர்ப் பானைகள் இரண்டும் மணமக்களை மங்கல நீராட்டும் போது பயன்படுத்தப்படுகிறது. தற்காலத்தில் ஒரு சில இடங்களில் தண்ணீர் பானைகளைப் பயன்படுத்துவதில்லை. மாற்றாக உலோகங்களால் ஆன குடங்களைப் பயன்படுத்துகின்றனர்.

**மடைக்கலப் பானை**

மடை என்பது உணவு ஆகும். உணவு சமைக்கப் பயன்படுத்தும் பானை என்பதால் இதனை மடைக்கலப் பானை என்கின்றனர். திருமணம் முடிந்த அன்று மாலை மணப்பெண் வீட்டிற்கு அருகில் உள்ள பிள்ளையார் கோயிலில் புதுப்பானையில் பொங்கல் வைப்பார். இதனை 'மடைக்கலப்பானைப் பொங்கல்' என்கின்றனர்.

**மூங்கில் பொருட்கள்**

**பேழைக் கூடை**

பேழைக் கூடை என்பது மூங்கிலால் செய்யப்பட்ட சிறிய பெட்டி போன்ற அமைப்புடையதாகும். கொங்கு நாட்டில் கோயில் திருவிழாக்கள் முதல் வீட்டுச் சடங்குகள் வரை அனைத்திலும் பேழைக் கூடை பயன்படுத்தப்படுகிறது. இதனை பேச்சு வழக்கில் 'போலக்கூடை' என்று குறிப்பிடுகின்றனர். மங்கல வாழ்த்துப் பாடலில் இது 'பேழைமூடி' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பெருகும் வளைக்கையால் பேழைமூடி யையெடுத்து"[5]

மணமகன் வீட்டில் நடைபெறும் இணைச்சீர் நிகழ்வில் 'பேழைக் கூடை' இடம் பெறுகிறது.

"மணமகனின் சகோதரி முகூர்த்தப்புடவை, பூ, வாழைப்பழம், தேங்காய், வெற்றிலை பாக்கு, முகம் பார்க்கும் கண்ணாடி, சீப்பு, மஞ்சள் போன்ற மங்கலப் பொருட்கள் அடங்கிய பேழைக் கூடையைத் தலையில் வைத்துக்கொண்டு மணவறை போன்று அலங்கரிக்கப்பட்ட இடத்திற்கு வருவார். பின்னர் அதில் உள்ள மங்கலப் பொருட்களை எடுத்து அருகில் உள்ள முக்காலியின் மீது வைத்துவிட்டு சகோதரியை அப்பேழையினுள் நிறுத்தி சடங்கு செய்வர். சடங்குகள் முடிந்ததும் மணமகனின் சகோதரி பேழையில் மங்கலப் பொருட்களை வைத்து தன் தலையின் மீது எடுத்துச் செல்வார்."[6]

குலம் கோதுதல், கங்கணம் கட்டுதல், நாட்டுக்கல் வழிபாடு போன்ற சடங்குகளின் போதும் மணமக்களை பேழையினுள் நிறுத்தி சடங்குகள் செய்யப்படுகிறது. கொங்கு வேளாளர்களின் திருமணச்சீரின் தொடக்கம் முதல் இறுதிவரையிலும் பேழைக் கூடையின் பயன்பாடு இன்றியமையாததாக உள்ளது.

**நாழியரிசிக் கூடை**

மூங்கிலால் செய்யப்பட்ட இக்கூடையில் அரிசி, நெல், கூறைப்புடவை, மாங்கல்யம், பெண்ணிற்குத் தேவையான அணிகலன்கள், மஞ்சள், குங்குமம், வெற்றிலை பாக்கு, பூ, சந்தனம், தேங்காய், பழம், வெல்லம், நெய், விளக்கெண்ணெய், எலுமிச்சம்பழம் போன்ற மங்கலப் பொருட்களை வைத்து மணமகன் வீட்டார் மணமகள் வீட்டிற்கு எடுத்துச் செல்வர். இதனை 'நாழியரிசிக் கூடை' என்று குறிப்பிடுகின்றனர்.

**மரப் பொருட்கள்**

**குந்தாணி**

குந்தாணி என்பது மரத்தால் செய்யப்பட்ட உள்ளே துளையுடன் கூடிய உரல் போன்ற அமைப்புடைய பொருளாகும். கொங்கு வேளாளர்களின் விவசாயத் தொழிலுக்கு குந்தாணி மிக

அத்தியாவசியமானது. கொங்கு வேளாளர்களின் அனைத்துத் திருமணங்களிலும் 'குந்தாணி' தவறாமல் இடம் பெற்றிருக்கும். அதன் மீது 'ஆயிரம் பெருந்திரி விளக்கு' வைத்திருப்பர். விளக்கு வெளிச்சத்தை மட்டுமே கொண்டு வாழ்ந்த அன்றைய காலத்தில் சற்று உயரமான இடத்தில் விளக்கினை வைப்பதற்காகக் குந்தாணியைப் பயன்படுத்தியிருக்கலாம். அது இன்றளவும் வழிவழியாகப் பின்பற்றப்பட்டு வருகிறது.

**முக்காலி**

மரத்தாலோ அல்லது இரும்பு, பித்தளை போன்ற உலோகங்களாலோ செய்யப்பட்ட முக்காலியை கொங்கு வேளாளர்கள் தங்களின் சடங்குகளில் பயன்படுத்துகின்றனர். மணமக்களை அமர வைத்து நீராட்டவும் மங்கலப் பொருட்களை வைக்கவும் முக்காலியைப் பயன்படுத்துகின்றனர். இன்றைய காலத்திலும் முக்காலி இல்லாத வீடுகளே இல்லை எனலாம். மங்கலம், அமங்கலம் ஆகிய இரண்டு வகையான நிகழ்வுகளிலும் சடங்கு செய்யும் போது முக்காலியின் பயன்பாடு அதிகம்.

**கல்லாலான பொருட்கள்**

**அம்மி, குழவி**

தமிழர்களின் பெரும்பாலானோர் திருமணங்களில் அம்மி மற்றும் குழவி தவறாமல் இடம் பெறுகிறது. மணப்பெண்ணிற்கு அம்மியின் மீது கால் வைத்து மெட்டி அணிவிப்பது தமிழர்களின் வழக்கமாகும். கொங்கு வேளாளர்களின் திருமணங்களில் மணப்பெண்ணின் கால்கட்டைவிரலை அம்மி மீது வைத்து அருந்ததி நட்சத்திரத்தைக் காணச்செய்வர். அருந்ததி போல் கற்புடையவளாகவும் அம்மி போல் அதில் உறுதியுடனும் இருப்பேன் என மணப்பெண் உறுதி கூறுவதாக இந்நிகழ்வு அமைகிறது. இணைச்சீர் நிகழ்விலும் அம்மியும் குழவியும் இடம்பெறுகிறது.

**"அம்மி வலமாக அரசாணி முன்னாக"[7]**

நாட்டுக்கல் வழிபாட்டின் போது குழவிக்கல்லை நட்டு வைத்து அதற்கு கங்கணம் கட்டி மங்கலப் பொருட்களால் அலங்கரித்து வழிபடுகின்றனர். இதனை "குழவிக்குக் கங்கணம் குணமுடன் தரித்து"[8] என்கிறது மங்கல வாழ்த்து.

**உலோகப் பொருட்கள்**

**சருவச் சட்டி (கலம்)**

கொங்கு வேளாளர்களின் அனைத்துச் சடங்குகளிலும் முதன்மை வகிப்பது 'சருவச்சட்டி' எனப்படும் வாயகன்ற பித்தளையால் ஆன பாத்திரம் ஆகும். இது 'தட்டு' போன்ற அமைப்பில் உட்புறம் சிறிது குழிவு உடையதாக இருக்கும்.

**"பொற்கலத் தமைத்துப் புனிதமாய் வைத்து"[9]**

**"சுத்தமுடன் கலம்விளக்கிச் சோறுஅரிசி பால்பழமும்"[10]**

என்னும் மங்கல வாழ்த்துப் பாடல் அடிகள் 'கலம்' என்றும் 'பொற்கலம்' என்றும் இதனைக் குறிப்பிடுகிறது.

"கொங்கு வேளாளர்களின் திருமணத்தின்போது மணமக்களுக்கு புனித நீராட்டுதல் நடைபெறும். அப்போது மஞ்சளும் சுண்ணாம்பும் கலந்து உருட்டப்பட்ட செஞ்சோற்று உருண்டைகளை சருவச் சட்டியில் வைத்து மங்கலன்(நாவிதன்) கொடுப்பான். அதனை எழுதிங்கள் செய்துகொண்ட சுமங்கலிப் பெண்கள் வாங்கி மணமகனை இடம் வலமாகச் சுற்றிப் போட்டபின் சருவச்சட்டியால் நீரை வாங்கி ஊற்றுவர். இதுபோலவே மணப்பெண்ணுக்கும் சருவச்சட்டியால் தண்ணீர் ஊற்றப்படுகிறது. இன்றும் சருவச்சட்டியை அனைத்து வீடுகளிலும் வைத்திருப்பர்."[11]

இணைச்சீர் நிகழ்வின் போதும் திருமணம் நடக்கும் போதும் சருவச் சட்டியில் நீரும் பாலும் ஊற்றி வைக்கப்பட்டிருக்கும். அதில் அருகம்புல்லையும் வெற்றிலையையும் போட்டு மங்கலன் தன் கையால் எடுத்துக்கொடுத்த பின்னர் அருமைப் பெரியவர் 'அருகு மணம்' எடுப்பார். பிறை மண் எடுத்தல், மணமக்களுக்குக் கங்கணம் கட்டுதல் என அனைத்து நிகழ்வுகளிலும் சருவச்சட்டியைப் பயன்படுத்துகின்றனர். மணமக்களுக்கு ஆரத்தி எடுக்கவும் இது பயன்படுகிறது. பண்டைக் காலத்தில் இது மண்ணால் செய்யப்பட்டதாக இருந்திருக்கலாம். மதுக்கரைப் பட்டயம் குறிப்பிடும் பெரிய தடச்சட்டி என்பது இதுவாக இருக்கலாம்.

திருமணச்சீரின் போது அனைத்துச் சடங்குகளிலும் பயன்படுத்தப்படும் சருவச்சட்டியை பூப்பெய்திய பெண்ணை நீராட்டவும், இறப்புச்சடங்கில் இறந்தவருக்குக் கொள்ளி வைத்த மகனுக்கு தண்ணீர் ஊற்றவும் பயன்படுத்துகின்றனர். எனவே மங்கலச் சடங்கு மற்றும் அமங்கலச் சடங்கு இரண்டிலும் இது பயன்படுத்தப்படுகிறது. உட்புறம் அதிக குழிவு இல்லாததால் தண்ணீர் தடையின்றி சீராக ஊற்றும் என்பதற்காக அனைத்துச் சடங்குகளிலும் நீராட்டுவதற்காக இது பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

**நிறைநாழி**

படி (அளவை) அல்லது சிறிய வல்லம் போன்ற அமைப்பில் இருப்பது நாழியாகும். நிறைநாழி என்பது நாழியினுள் நெல் நிரப்பி அதன்மீது நூல் சுற்றிய கதிரும் வெற்றிலை பாக்கும் வைக்கப்பட்டிருக்கும். திருமணத்தின் அனைத்துச் சடங்குகளின் போதும் சீர்க்காரப் பெண்ணால் நிறைநாழியுடன் தேங்காய் பழம் சேர்த்து மணமக்களுக்குச் சுற்றப்படுகிறது. ஒவ்வொருமுறை சுற்றிய பின்னும் அதில் உள்ள நெல் மாற்றப்படுகிறது. இந்நெல் சடங்குகளை முன்னின்று செய்யும் மங்கலனுக்குக் (நாவிதன்) கொடுக்கப்படுகிறது.

“நெல் வட்டப்படியில் நிறைந்திருப்பது போல் அவர்கள் வாழ்வு நிறைவாக இருக்க வேண்டும் என்பதும். கதிரும், நூலும் இரண்டறக் கலந்து சுற்றியிருப்பது போல் மணமக்களும் இணை பிரியாமல் இருக்க வேண்டும் என்பதும் அதன் கருத்தாகும்.”[12] என்று புலவர் செ.இராசு குறிப்பிடுகிறார்.

**மிடா**

‘மிடா’ என்பது உணவைப் பானையிலிருந்து எடுக்கப் பயன்படுத்தப்படும் தோசை திருப்பி போன்ற அமைப்புடையதாகும். திருமணமான பெண் முதன் முதலில் தன் கணவனுக்கு உணவு போடுவதைக் கொங்கு வேளாளர்கள் ஒரு சடங்காகவே மேற்கொள்கின்றனர். மணப்பெண் புதுப்பானையில் உணவு சமைத்து அதனை மிடாவினால் எடுத்துப் பரிமாறுவதால் இச்சடங்கினை மிடாச் சோறு தோண்டுதல் என்கின்றனர்.

**குடை**

மணமக்களின் மீது வெயில், மழை போன்றவை படாமல் இருக்கவும் பறவைகளின் எச்சம் விழாமல் இருக்கவும் குடை பிடிக்கப்படுகிறது. பண்டைய காலத்தில் வெண்மை நிறக் குடை பிடிக்கப்பட்டதை மங்கல வாழ்த்துப் பாடல் குறிப்பிடுகிறது. ஆனால் தற்காலத்தில் கருமை நிறக்குடையே பிடிக்கப்படுகிறது.

“வெள்ளைக் குடையுடனே வெண்கவரி சூழ்ந்துவர”[13] என்பது மங்கல வாழ்த்து அடியாகும்.

இவை மட்டுமின்றி இன்னும் பல்வேறு பொருட்கள் கொங்கு வேளாளர்களின் திருமணங்களில் புழக்கத்தில் உள்ளன.

**முடிவுரை**

இன்றைய நவீன உலகத்தில் உருவாகிவரும் புதியபொருட்கள் மனிதப்பண்பாட்டை வெளிப்படுத்தும் பழம்பொருட்களின் பயன்பாட்டை இல்லாமல் செய்துவிட்டது. சடங்குகளில் பயன்படுத்தப்படும் சில பழமையான புழங்கு பொருட்களே இன்றுவரை நிலை பெற்றுள்ளன எனலாம். கொங்கு வேளாளர்கள் வேளாண்மைத் தொழில் செய்பவர்கள் என்பதால் தங்களின் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்ட கருவிகளைத் தங்களின் சடங்குகளிலும் இடம்பெறச் செய்தனர். அவைகள் காலம் காலமாகத் தொடர்ந்து புழக்கத்தில் இருந்துவருகின்றது. இவற்றில் சில பொருட்கள் மாற்றத்திற்கு உட்பட்டும், சில பொருட்கள் அற்றுப் போனாலும், பல்வேறு பொருட்கள் அன்று முதல் இன்று வரை தொடர்ந்து புழக்கத்தில் உள்ளன. இவ்வாறு திருமணச் சடங்குகளில் தொடர்ந்து பயன்படுத்தப்படும் புழங்கு பொருட்கள் கொங்கு வேளாளர்களின் பழம் பெருமைக்குச் சான்றாக அமைந்துள்ளது.

**அடிக்குறிப்புகள்**

1. லூர்து, தே., நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், ப.297
2. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.165
3. தகவலாளர்: பழனிவேலு, சின்னாக்கவுண்டனூர்

4. தகவலாளர்: பெருமாள், சூளகரை
5. மங்கல வாழ்த்து, 216
6. தகவலாளர்: காளியப்ப கவுண்டர், புதூர்
7. மங்கல வாழ்த்து, 237
8. மேலது. 132
9. மேலது. 128
10. மேலது. 239
11. தகவலாளர்: பழனி, வீரியம்பட்டி
12. இராசு, செ., கொங்கு வேளாளர் சீர்களும், இலக்கியங்களும், ப.20
13. மங்கலவாழ்த்து, 174

**துணை நின்ற நூல்கள்**

1. இராசு, செ., கொங்கு வேளாளர் சீர்களும், இலக்கியங்களும்.
2. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல்.
3. லூர்து, தே., நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள்.